# யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல வழங்க அரசு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழ 89/90ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கு மகாபொல உதவிப் பணம் வழங்க 15 லட்சம் ரூபா தேவைப்படுகிறது என பதிவாளர் தெரிவித்தார். அதற்கு இரண்டு மில்லியன் ரூபாவை கொழும்பிலிருந்து எடுத்துவர கூட்டுப்படை தலைமையலுவலகம் அனுமதி மறுத்துள்ளது. ஆனால் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளை எடுத்துவர மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். துணைவேந்தர் நிதி இல்லாதபடியால் கொழும்பில் இருந்தே பணத்தைப் பெற வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார். பதிவாளர் அண்மையில் கொழும்பு சென்றது குறிப்பிடத்தக்கது. எனினும் துணைவேந்தர் நிதி இல்லாதபடியால் கொழும்பில் இருந்தே பணத்தைப் பெறவேண்டும் எனவும் இதுபற்றி யாழ் அரச அதிபரிடமும், தெளிவாக கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். (74)

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 05 ஒலி 11 பிரமோதூத கார்த்திகை 22 (08-12-1990) சனி

# வவுனியாவில் விமானத் தாக்குதல்

# கடைகள் வீடுகள் பலத்த சேதம்

## நயினாமடுவில் கடும் மோதல்

**நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்திலுள்ள நயினாமடுப் பகுதியில் ஹெலி, பொம்மர், அவ்ரோ ஆகியன பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.**

இவ்வாறு தாக்குதல் நடாத்திக்கொண்டிருந்த வேளை தரைவழியாக மாமடுப்பகுதியில் இருந்து இராணுவத்தினர் முன்னேறிக்கொண்டிருந்தனர். இவ் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது ஆயினும் சேத விபரம் தெரியவிலலை.

குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலினால் நயினாமடுப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றும், நான்கு வீடுகள், கடைகள் என்பனவும் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் பூந்தோட்டப் பகுதியில் கடுமை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனவர்களின் விபரங்கள் சேகரிக்கப்படும்

காணாமற்போன ஆள்கள் பற்றிய தகவல்கள் தற்போது அத்தியாவசிய சேவைகள் நாயகம் அலுவலகத்திலுள்ள குடிமக்கள் தகவல் நிலையத்தினால் சேகரிக்கப்படுகின்றன,

யாழ் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் இதற்கான விண்ணப்பப்படிவங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன,

சம்பந்தப்பட்டோர் ஒவ்வொரு ஆள்பற்றிய விபரங்

—04 ஆம் பக்கம் பார்க்க

தச்சன்காட்டுச் சந்தியில்

## அரண் அமைத்த இராணுவம் மீது புலிகள் தாக்கு; சிப்பாய் பலி

மாவிட்டபுரம் பகுதியிலுள்ள தச்சன் காட்டுச் சந்தியில் நேற்று முன் தினம் பிறபகல் 5 30 மணியளவில் 3 இராணுவத்தினர் காவலரண் அமைக்க முயன்று கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குலில் ஒரு இராணுவச் சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். மற்றைய இரு இராணுவத்தினரும் காயங்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். (71)

## பலாலி ஆசிரிய கலாசாலை திருநெல்வேலிக்கு இடமாற்றம்

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தற்காலிகமாக இயங்கிவந்த பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இம்மாத நடுப்பகுதியில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயக் கட்டடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

1986-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற இராணுவத் தாக்குதல் காரணமாகப் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய்க்கு இடமாற்றப்பட்டது.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் கோர பஸ் விபத்து 11 மாணவர் பலி; 53 பேர் காயம்

கண்டி பத்தேகமப் பகுதியில் நேற்றுக்காலை நடைபெற்ற கோர பஸ் விபத்தில் பாடசாலை மாணவர்கள் பதினொரு பேர் பலியாகினர்.

நேற்றுக்காலை மொனராகலையில் இருந்து புறப்பட்ட இந்தபஸ் க பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கு செல்லும் மாணவர்களை ஏற்றிச் சென்றது.

பத்தேகமப்பகுதியில் கடும் மழையினால் பாதையை விட்டு விலகிய பஸ் 250 அடி பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 125 மாணவர்களில் 11 மாணவர்கள் கொல்லப்பட்டனர், 53 பேர் காயமடைந்தனர். சாரதியும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டு. 35-ம் கிராமத்தில்

## வீடுபார்க்கச் சென்றோர் மீது ராணுவம் சூடு; இருவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முப்பத்தைந்தாம் கிராமத்தில் தமது சொந்த வீட்டை பார்வையிடுவதற்கு சென்ற பொதுமக்கல் மீது இராணுவம் சுட்டதில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சூட்டுச் சம்பவத்தில் துறைநிலாவணையைச்

—04 ஆம் பக்கம் பார்க்க

## படுவான்கரையில் படகு கவிழ்ந்து சகோதரிகள் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரையில் உள்ள திருப்பழுகாமம் பகுதியில் இருந்து எழுவான் கரைக் கிராமத்திலுள்ள கழுதாவளைக்கு படகில் சென்ற இரு சகோதரிகளும், தோணி ஓட்டியும் தோணி கவிழ்ந்ததில் மரணமானார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை சந்திரா (25), கிருஷ்ணபிள்ளை இந்திரா (23), படகோட்டி சின்னத்தம்பி காளிக்குட்டி ஆகியோரே மரணமானவர்கள். இச் சகோதரிகள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த சமயமே இவ் விபத்து இடம்பெற்றது (71)

## அகதிகளுக்கு பொருள்சேகரிப்பு

விடுமுறை நாட்களில் கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் அகதிகளுக்கான, நிதி, உடைகள், மற்றும் பொருட்கள் சேகரித்துவருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து முல்லைத்திவுக்கு இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கு வழங்கவே இவர்கள் இம் முயற்சியில் ஈடுபடுகின்றனர். (ப 6)

## இலங்கை இந்தியப் படையினரால் ஒரே குடும்பம் பாதிக்கப்பட்டது!

நேற்று மூன் தினம் பலாலி இராணுவமுகாமிலிருந்துமேற் கொளளப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட த. விதர்சன் (2) மரணமானார்.

இவருடன் சேர்ந்து இக் குடும்பத்தில் பலியானோர்களின் தொகை 3 ஆக அதிகரித்துள்ளது. ஸ்தலத்திலேயே

— 04 ஆம் பக்கம் பார்க்க

நிலுவைப்பணத்தைச் செலுத்துமாறு

## வரியிறுப்பாளர்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளாலும் விமானக் குண்டுவீச்சுக்களாலும் மாநகரசபை பெருமளவில் அழிவுற்றதுடன் அதற்குச் சொந்தமான வாகனங்களும் சேதமாக்கப்பட்டன. பாரிய அளவில் பாதிப்புற்ற இந் நிலையிலுங்கூட வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய ஆகக் குறைந்தபட்ச அத்தியாவசிய சேவைகளையாவது வழங்கவேண்டிய கடப்பாடு மாநகரசபைக்கு உண்டு என்று யாழ் மாநகர ஆணை

—04 ஆம் பக்கம் பார்க்க

மன்னார் மக்கள்

## கொழும்பு செல்வதற்கு இராணுவத்தின் அனுமதி தேவை

மன்னார்ப் பகுதி மக்கள் கொழும்புக்குச் செல்லவேண்டுமானால் கப்பல் மூலம் தான் செல்ல வேண்டும் என்று அங்குள்ள இராணுவத்தினால் பணிக்கப்பட்டுளளதாகத் தெரியவந்துள்ளது.

கப்பலில் செல்வோர் என்ன தேவையென்பதை தெரியப்படுத்தி இராணுவ முகாமில் அனுமதி பெற்றாலே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (33)

நேற்று முதல்

## இறைச்சி வியாபாரம் வெள்ளி நிறுத்தம்

சகல மதங்களினதும் புனித நாளான வெள்ளிக் கிழமைகளில் யாழ் நகரில் நிகழ்ந்து வந்த மாட்டிறைச்சி வியாபாரம் நேற்று வெள்ளிக்கிழமை முதல்நிறுத்தப்பட்டுள்ளது.

இக்குறைபாட்டை கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை 'முரசொலி' சுட்டிக்காட்டியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## சிறிய செய்திகள்

### புங்குடுதீவுக்கு குடிநீர் வழங்க புதிய ஏற்பாடு

புங்குடுதீவு மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு பெரும் சிரமப்பட்டுவந்துள்ளதைக் கருத்திற் கொண்டு புங்குடுதீவு - நயினாதீவு பல-நோ. கூட்டுறவுச் சங்கத்தினர் வேலணை சாட்டிப் பகுதியில் காணி ஒன்றினை சொந்தமாக வாங்கியுள்ளனர்.

இக்காணியில் கிணறுகள் அமைக்கப்பட்டு புங்குடுதீவுக்குக் குடிதண்ணீர் எடுத்துக் செல்லப்படவுள்ளது. (20)

### மயிலிட்டி கடற்றொழிலாளர் விபரம் சேகரிப்பு

தற்போது இடம்பெயர்ந்துள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர்களின் விபரங்கள் மற்றும் சேத விபரங்களை யாழ் மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி அதிகாரிக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக மயிலிட்டி கிராமிய கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் 27 நிர்வாக சபை உறுப்பினர்களையும் உடுவிலில் உள்ள சக்தி அகதி முகாமில் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு சந்திக்குமாறு தலைவர் செ. தனபாலசிங்கம் கேட்டுள்ளார்.

### ஷெல் தாக்குதலில் நிறுவனம் சேதம்

சுன்னாகத்தில் நடந்த ஷெல் தாக்குதலில் குறூஸ் நிறுவனம் சேதமடைந்துள்ளது.

இந்நிறுவன லொறியை வவுனியாவுக்கு அப்பால் முஸ்லிம்கள் கடத்திப் பணம் பறித்திருந்தமை பற்றிய செய்தி 18-ம் திகதிய முரசொலியில் வெளிவந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-2)

### பிரசவ விடுதி இடமாற்றம்

பளை நகர்ப் பகுதியில் இருந்த அரசினர் பிரசவ விடுதி பளை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் பளையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் பிரசவ விடுதியும் சேதமடைந்ததையடுத்தே இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பிரசவ அறை வசதி இல்லாததால் வைத்திய அதிகாரி விடுதியில் உள்ள அறையொன்றில் பிரசவங்கள் நடைபெறுவதாகவும் அறியப்படுகிறது. (ப-3)

### கட்டுவன் பகுதியில் இடம்பெயர்ந்தோர் வீடுகளில் திருட்டு

கட்டுவன் தெற்கு, ஏழாலை வடக்குப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்போது இடம்பெயர்ந்துள்ள இப்பகுதி மக்கள் மீண்டும் தமது வீடுகளை வந்து பார்க்கும்போது அவை உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றார்கள்.

அண்மையில் இப்பகுதிகளில் உள்ள இ தம்பிஐயா, திருமதி எஸ் தவமணி, பண்டிதர் இராசையா ஆகியோரின் வீடுகள் உடைக்கப்பட்டு ரேடியோ, மணிக்கூடு உடுபுடவைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-10)

### கிளிநொச்சிக்கு மருந்து வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையின் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மருந்துகளை வழங்க முன்வந்துள்ளது.

இம் மருந்து வகைகளை சுகாதாரத் திணைக்களம் ஊடாக வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74, 71)

### மக்கள் வங்கியின் மன்னார் ஊழியருக்கு அழைப்பு

மக்கள் வங்கியின் சிலகிளைகளில் கடமை புரிவதற்கு தற்காலிக அனுமதிவழங்கப்பட்ட மன்னார் மக்கள வங்கியைச் சார்ந்த ஊழியர்களை எதிர் வரும் திங்கட்கிழமை 10-ம் திகதி யாழ்பிரதேச தலைமை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்.

### அடைமழையினால் அழுகல் நோய்

அடைமழையினால் வெள்ளம் தேங்கி நிற்பதால் புடோல், பாகல், பயற்றை, கத்தரி, பூசினி போன்ற மரக்கறிப் பயிர்களின் வேர்கள் அழுகி வாடல் நோய்த் தாக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

இப்பயிர்களில் பூ. பிஞ்சுகள் எல்லாம் கொட்டியுள்ளன. இதனால் மரக்கறிகளின் விலை ஏறியுள்ளது. (37)

### முல்லை. தபால்கள் ரயில் மூலம் அனுப்பப்படும்

முல்லைத்தீவுக்கு தபாற்பொதிகள் கூட்டுறவுச் சங்க லொறிகள் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ரயில் மூலம் வவுனியா வரை வரும் தபாற்பொதிகளும் வவுனியா தபால் அலுவலக மூலமாக லொறி மூலம் முல்லைத்தீவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவில் தபாற் சேவை சீர்கெட்டிருப்பதையடுத்து முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு.கே. பொன்னம்பலம் மேற்படி நடவடிக்கையையெடுத்துள்ளார். (38)

### சாராயத்தால் அதிக வரி

நாட்டிலுள்ள அனுமதி பெற்ற வடிசாலைகள் கடந்த ஆண்டு ஒரு கோடி 38 லட்சத்து 61 ஆயிரத்து 808 லீற்றர் தென்னஞ் சாராயம், அதிவிசேட சாராயம் என்பனவற்றை உற்பத்தி செய்துள்ளன.

அரசவடிசாலைகள் 35 லட்சத்து 57 ஆயிரத்து 253 லீற்றர் தென்னஞ் சாராயத்தை உற்பத்தி செய்துள்ளன. இதன் மூலம் 36 கோடியே 80 லட்சத்து 35 ஆயிரத்து 887 ரூபா தீர்வையாகக் கிடைத்தது. 99 லட்சத்து 19 ஆயிரத்து 555 லீற்றர் அதிவிசேட சாராயம் உற்பத்தி செய்யப்பட்டது இதன் மூலம் 100 கோடியே 35 லட்சத்து 95 ஆயிரத்து 403 ரூபா தீர்வையாகக் கிடைத்தது.

1989 ஆம் ஆண்டில் தனது நிர்வாக அறிக்கையில் இத்தகவலை வெளியிட்டுள்ள கலால் திணைக்களம் வட-கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சனைகள் இல்லாதிருந்தால் மேலதிக வருமானம் கிடைத்திருக்குமென்று தெரிவித்தார். (33)

பள்ளிவாசலில் துவேஷ போதனை; ஆயுதங்களும் விநியோகம்

# தமிழர் விரோத உணர்வு முஸ்லிம் மத்தியில் வலுவடைகிறது

கொழும்பில் கொட்டாஞ்சேனைப்பகுதியிலும் மற்றும் முஸ்லிம் - தமிழர் கலந்து வாழும் பகுதிகளிலும் தற்பொழுது அடிக்கடி உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அறியப்படுகின்றது.

இப்பகுதிகளில் முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிரான வன்செயலுக்கு தூண்டப்படுவதாகவும், சில அமைப்புக்கள் மூலம் கத்தி, வாள் போன்ற ஆயுதங்கள் முஸ்லிம் காடையர்களுக்கு அங்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகின்றது.

வெள்ளிக்கிழமைகளில் தொழுகைகளில் தமிழர்களுக்கெதிரான உரைகள் இடம் பெறுவதாகவும், பள்ளிவாசல்களுக்கு வரும் முஸ்லிம்கள் திட்டமிட்ட அடிப்படையில் தூண்டப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலும் இதர பகுதிகளிலும் முஸ்லிம் அமைப்புக்களினால் வெளியிடப்படும் இஸ்லாமிய மார்க்கப் பத்திரிகைகளில் தமிழர்கள் முஸ்லிம் இனத்தவர்களின் துரோகிகள் என வர்ணிக்கப்படுவதுடன், தமிழர்களுக்கெதிரான வன்செயலை தூண்டக்கூடியவகையிலான ஆக்கங்கள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (74)

# சுயவிருப்பில் ஓய்வுபெற 373 ஆசிரியர்கள் விண்ணப்பம்

யாழ் மாவட்டத்திலிருந்து சுயவிருப்பு ஓய்வுத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெற பெரும் தொகையான ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மருதனாமடம், வேலணை, வடமராட்சி, பண்டத்தரிப்புக் கோட்டப் பிரிவுகளில் இருந்து மட்டும் சுமார் முந்நூற்றி எழுபத்துமூன்று ஆசிரியர்கள் இத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு கோட்டத்தில் மட்டும் நூற்றிப்பதினொரு ஆசிரியர்கள் ஓய்வு பெற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

மருதனாமடக் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் நூற்றிஎண்பத்தேழு பேர் சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெறுவதற்கான படிவத்தை நிரப்பி வழங்கி உள்ளனர்.

இக்கோட்டத்தில் கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மூவரும் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பதினைந்து ஆசிரியர்கள் தமது சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கான படிவத்தை வழங்கி உள்ளனர்.

இக்கோட்டத்தில் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவரும் தனது விண்ணப்பத்தை வழங்கி உள்ளார்.

வடமராட்சிக் கோட்டக் கல்வி ஆசிரியர்களில் இதுவரை அறுபதுபேர் தமது ஓய்வுபெறும் படிவத்தை வழங்கி உள்ளனர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரி ஒருவரும் ஓய்வுபெறுவதற்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ளார். (ப-17)

### வவுனியாவில் பரீட்சார்த்திகள் மிகக் குறைவு

வவுனியா மாவட்டத்தில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை மூன்று பாடசாலைகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எனினும்குறைந்தளவு மாணவர்களே தோற்றிவருகின்றனர்.

இப்பரீட்சை மண்டபங்கள் ஒன்றில் 100 மாணவர்களும், இன்னொன்றில் 03 மாணவர்களும், மற்றுமொரு மண்டபத்தில் எவருமே பரீட்சைக்குச் சமுகமளிக்காமலும் உள்ளதாக வவுனியா கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்துதெரியவருகின்றது. (47)

### கொழும்பு தபால்கள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணக் குடா நாட்டுத் தபாலகங்களிற் சேகரிக்கப்பட்ட 28 தபாற்பொதிகள் நேற்றுக்காலை பருத்தித் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை நேற்று கொழும்பு செல்லவிருந்த கப்பலில் அனுப்பி வைக்கப்படவிருந்தன. (33)


## சிறு விளம்பரம்

### சேவை

மீண்டும் யாழ் நகரில் தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'ஸ்கைலைன்ஸ்' 281B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் காலை 9.00 மணி முதல் மாலை 2.00மணிவரை Skylines, 281B, Clock Tower Road Jaffna (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை) 12013

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண் டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12062

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி --- யாழ்ப்பாணம்

O/L - 90

Day Classes

மீட்டல் வினாவிடை

வகுப்புகள் ஆரம்பம்: 10-12-90

காலை - 9.00 மணி

கணிதம் — நவராஜா
விஞ்ஞானம் — செல்வவடிவேல்
சமூகக்கல்வி — முத்துலிங்கம்
ஆங்கிலம் — பொன். சௌந்திரி
வர்த்தகம் — மகேஸ்வரன்
தமிழ் ) சமயம்) — பண்டிதர்

12050

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1991/92

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாடநெறிகளான

★ கலைமாணி B. A.
★ விஞ்ஞானமாணி B.Sc.
★ வணிகமாணி B.Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விரிவுரைகள் 5-1-1991-ல் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

கிளை:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கருகாமை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

12060

# யாழ் - வவுனியா பயணம் பாதிப்பு

# பயணிகள் பாடசாலையில் தஞ்சம்

யாழ் மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்லவென கடந்த 27-ம் திகதிக்குப் பிறகு புறப்பட்டுச் சென்ற பலர் வவுனியாவைச் சென்றடைய முடியாமல் நொச்சிமோட்டையில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்று முழங்காவில் வழியாக தென்பகுதி நோக்கிச் செல்லவெனச் சென்றோர் மடுககோவிலில் தங்கியுள்ளனர்.

கொழும்பிலிருந்து வவுனியாவை வந்தடைந்த பலர் அங்கிருந்து வரமுடியாத நிலையில் வவுனியாவில் தங்கியுள்ளனர். இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து மறுபடியும்புகையிரத சேவை வவுனியாவரை நடாத்தப்படுகின்றது.

ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்ட 24-ம் திகதிக்குப் பின்னர், வவுனியாவுக்கு புகையிரதம் கடந்த செவ்வாய்க்கிழமையே வந்தது. இப் புகையிரதத்தில் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்காக சுமார் 100 பிரயாணிகள் வந்திருந்தனர். வவுனியாவுக்கூடாகச் செல்ல முடியாத சூழ்நிலையில், ஒரு சிலர் தெரிந்தவர்கள், நண்பர்கள வீடுகளிலும் மீதமானோர் அகதிமுகாமிலும் தங்கினர் தொடர்ந்தும் புகையிரத மூலம் மக்கள் வவுனியாவிற்கு வந்துகொண்டிருக்கின்றனர்.

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்ட காலத்திலிருந்து சுமார் 500 க்கும் அதிகமான மக்கள் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்காக வவுனியாவில் தங்கியுள்ளனர். (47, 74)

# வடக்கிலிருந்து சென்ற சிலரின் 'மரணத் தகவல்' தொடர்கின்றது

அரசாங்க ஊழியர்களாகவும், மற்றும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுமாகச் சிலர் கடமையின் பொருட்டு திருகோணமலை, கொழும்புப் பகுதிகளுக்குச் சென்றால் அவர்கள் வடபகுதிக்குத் திரும்புவதில்லை என்றும் அவர்களது மரண அறிவித்தல்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு உறவினர்கள் அறிந்துகொள்ளும் நிலை ஏற்படுவதாகவும். தெரிவிக்கப்படுகிறது

திருகோணமலையில் அரசாங்க ஊழியராகக் கடமை புரியும் வல்காமம் மேற்கைச் சேர்ந்த ஒருவர் வடபகுதிக்குத் திரும்பவில்லை என்றும் அவரது மரண அறிவித்தல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு இங்குள்ள உறவினர்கள் அறிந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் எந்தவகையில் மரணமானார் என்பது இன்னமும் தெளிவாகவும், ஆதாரபூர்வமாகவும் தெரியவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இதேபோன்று இங்கிருந்து கொழும்புக்குச் சென்ற வர்த்தகர் ஒருவரும் வழியில் அகாலமரணத்தைத் தழுவினார் என்று வானொலியில் அறிவிக்கப்பட்டதன் பின்பே உறவினர்கள் தகவல்பெற்றனர்

கொழும்புக்குச் சென்ற வலிகாமம் வடக்குக் கிராமம் ஒன்றைச் சேர்ந்த நபர் ஒருவரின் மரணச் செய்தியும் வானொலியிலேயே ஒலிபரப்பப்பட்டு வெளிவந்தது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் மேற்படி நபர்களின் மரணங்களின் பின்னணி பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும் மர்மம் சூழ்ந்த நிலையே நீடிப்பதாகவும விசனத்துடன் தெரிவிக்கப்படுகிறது. (70)

## முகாம்களில் தங்கியுள்ளோர் பங்கீட்டு உணவுபெற வசதி

இதுவரை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கானவாராந்த உணவுப் பொருள் விநியோகத்துக்கான நடவடிக்கைகளை யாழ் அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். இந்த டிசம்பர் முதல் வாரத்திலிருந்து இது நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி முகாம்களின் தங்கியுள்ள அகதிகள் தத்தம் முகாம்களுக்கு அண்மையில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகளிலிருந்து வாராந்தம் பங்கீட்டு உணவுப் பொருட்களை பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபர்கள்ால் வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டைகளை காட்டி மேற்படி உணவுப் பொருட்களை இவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

அரச அதிபருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் விளைவாக இம்முடிவு எடுக்கப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் முகாம்கள் தொடர்பான பிறதேவைகளை மேற்கொள்ளளாம். (66)

## ரயில்வேப் பகுதி ஒய்வூதியம் பெறுவோர்க்கு....

இலங்கை வங்கியின் காங்கேசன்துறை, மானிப்பாய்க் கிளைகளில் ரயில்வேப் பகுதி ஒய்வூதியம் பெறுவோர்களை இலங்கைவங்கியின் மானிப்பாய் கிளைக்கு நேரில் சமுகமளிக்குமாறு இக் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (16, 66)

## திருட்டுத்தனமாக பால் கறப்பு

புத்தூர், ஆவரங்கால் பகுதகளில் குறிப்பிட்ட சில இடங்களில் பசுப்பால் திருட்டுத்தனமாக கறக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரவு வேளைகள் இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுகிறதாம்.

தோட்டப் பகுதிகளில் உரிய பாதுகாப்பின்றிக் கட்டிவிடப்படும் பசுக்களிலிருந்தே, இவ்விதம் பால்த் திருட்டு நிகழ்கிறதாம். திட்டமிட்ட ஓர் கோஷ்டியே இப்புதுவகைத் திருட்டில் ஈடுபட்டு வருவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (37)

கட்டுநாயக்கா தொழிற்சாலையில்

## இரவு உணவு உண்ட 500 யுவதிகளுக்கு திடீர் நோய்

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றில் இரவு உணவு உண்ட ஐந்நூறுக்கும் மேற்பட்ட யுவதிகள் நோய்வாய்ப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு, ராகம ஆஸ்பத்திரிக்கு இவர்கள் விரையப்பட்டனர்.

## காணாமற் போனவர்கள் விபரம் உறவினர்களால் பதியப்பட்டது

கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பமான இராணுவத் தாக்குதல்களின் போது காணாமற்போன 178 பேர் பற்றிய விபரம் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திடம் உறவினர்களால் தெரியப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் தீவுப் பகுதி மற்றும் வலிவடக்கைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் பற்றிய விபரங்களைப் பெறுவதற்கு மேற்படி உறவினர்கள் இச்சங்கத்தின் உதவியை நாடியுள்ளனர். (74)

## கிழக்கு அகதிகளுக்கு ஊழியர் உதவி

கிழக்கு மாகாணத் தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காக சங்கானை, பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சகல ஊழியர்களும் தங்கள் ஒருநாள் சம்பளத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (13)

## கிளிநொச்சியில் மாணவர் ஆலோசனைக் கூட்டம்

மேஜர் முரளியின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை நினைவுகூருவது தொடர்பாக ஆலோசிப்பதற்காகக் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர் அனைவரும் மாணவர் இயக்க மாவட்டச் செயலகத்திற்கு 12-ம் திகதி காலை 9 மணிக்குத் தவறாது சமுகம் தருமாறு விடுதலைப் புலிகள்மாணவர்இயக்கக் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# நாவலர் - நம் காவலர்



இன்று (கார்த்திகை மாசத்து மகம்) நாவலர் ஐயாவின் குருபூசைத் தினமாகும் நாவலர் பெருமான் அவர்கள் இயற்கையெய்தி நூற்றுப்பதினொரு ஆண்டுகள ஆகின்றன. அவர்களது சேவையின் கனதியை மக்கள் சிந்தித்த வண்ணமேயுள்ளனர்.

நாவலர் பெருமானது சமூக சேவையின் பிரகசம் ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகமெங்கணும் பரவியிருந்தது. தமிழகத்தை ஈழத்துக்குக் கடமைப்படுத்திய பெருமையும் நாவலர் பெருமானுக்கேயுண்டு. தமிழகப் பெரியார் பேராசிரியர் எஸ். சோமசுந்தரபாரதியார் எம் எ.,பி.எல் அவர்கள் நாவலர் பெருமான் தமிழ்நாட்டுக்குச் செய்த பணியினை இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்பியுள்ளார்கள்.

''யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட்கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போலத் தமிழகத்தில் தளருஞ் சைவமுந் தமிழும் தழைய அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவர். முன்னே பல காலங்களிலுந் தமிழகத்திலிருந்து தான்பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி ஒரு காலத்து ஒருமுகமாகப் பழங்கடனைத்தீர்த்து என்றுந் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் என்றால் அது மிகையாகாது''

பதிப்புத் துறையில் சி. வை. தா. அவர்களைப் போல, வடக்கே, பதிப்புத்துறையில் மிகமிக ஈடுபாடு கொண்டு உழைத்தவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். 'தமிழ்த்தாத்தா' என்று அறிஞர் பெருமக்களினால் பாராட்டப்பட்டவர் டாக்டர் ஐயர் அவர்களைப்பற்றி எண்ணும் போது அவரது குருநாதரான திருக்கயிலாய பரம்பரைத்

ஆசிரியமணி

அ. பஞ்சாட்சரம்

திருவாவடுதுறையாதீனத்து மஹாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் நமது மனத்திரையிற் காட்சி அளிப்பார்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் நாவலர் பெருமானின் உயர்தனிச் சிறப்பை எடுத்துச் சொல்லும் முறை மிகவும் விஸ்தாரமானது

''கற்றுணர் புலவர் உட்களிக்கும்
முற்றுணர் ஆறுமுக நாவலன்''

முற்றுணர் ஆறுமுகநாவலர் என்பது மஹாவித்துவானவர்களது உளம் நிறைந்த பாராட்டு.

சௌமியவருடம்(1849) ஆடிமாதம் அச்சுக்கூடம் வாங்கும் நோக்கமாகப் பண்டிதர் ஆறுமுகம் சென்னைப் பட்டணம் சென்றார். திருவாவடுதுறை ஆதீனத்தையுந் தரிசித்தார் அங்கே அவர்களுக்கு ''நாவலர்' பட்டம் வழங்கப்பெற்ற சம்பவத்தைப் பண்டிதமணி அவர்கள் சுவைபடக் கூறியுள்ளார்கள்.

''இரண்டாவது சந்நிதானமாயிருந்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர். அவர் கலாவிநோதர்; ஒழுக்கசீலர்; சித்தியாருக்கு உரைசெய்த அறுவருள் ஒருவர்: அவர் பண்டிதரோடு சல்லாபஞ்செய்து, அவரது ஆற்றலையறிந்து தலைமைச் சந்நிதானம் தலைமையில் ஒரு வித்துவ சபை கூட்டிப் பண்டிதரைப் பிரசங்கஞ் செய்யும்படி பணித்தார் பண்டிதர் கடல்மடை திறந்தது போலச் சைவ சித்தாந்தப் பொருளிற் செந்தமிழ் மழை பொழிந்தார். உபயசந்நிதானங்களும் பேராச்சரியமுற்று 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கின. ஸ்ரீராமன் ஜனகனின் வேள்வியொன்றைக் காணச் சென்றவன், வில்லை வளைத்துச் சீதையுடன் மீண்டவாறு போல, அச்சுக்கூடம் வாங்கச் சென்ற பண்டிதர், ஆறுமுகநாவலராய்த் திரும்பினார் யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் பெருமைமலை விளக்காயிற்று''

பண்டிதர் ஆறுமுகம் அவர்களுக்கு நாவலர் பட்டத்தை வழங்கிய திருவாவடுதுறை ஆதீனமே சில ஆண்டுகளின் பின்னர் மீனாட்சி சுந்தரப்பிள்ளை அவர்களுக்கு மஹாவித்துவான் என்ற பட்டத்தையும் வழங்கியது பாம்பின் காலைப் பாம்பு அறியும் என்றவாறு நாவலர் பெருமான் அவர்களை ''முற்றுணர் ஆறுமுகநாவலன்' என்றார் மஹாவித்துவான் அவர்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பேர்சிவல் பாதிரியார் காலத்தில் தமிழ்ப் பண்டிதராயிருந்தவர் நாவலர் பெருமான் அவர்கள் பேர்சிவல் பாதிரியாரின் நோக்கம் கிறிஸ்தவ சமயத்தை வளர்ப்பது: சைவசமயத்தை வளர்ப்பதில் கண்ணாயிருந்தவர் நாவலர் பெருமான். இருவருக்கும் இருவேறு நோக்கங்கள் இருந்தபோதிலும், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு அவரவர் துறைகளில் உண்மைச் சமயிகளாயிருந்தனர் பிற்காலத்தில் சென்னை பட்டணஞ் சென்று 'தினவர்த்தமானி'' என ஒரு பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார் பேர்சிவல். சென்னையிலே பெரிய சபைகளிலே நாவலரைப் பேர்சிவல் துரை காணுஞ் சமயங்களிலெல்லாம் எழுந்து அஞ்சலி செய்து ''மம குரு'' (எனது குரு என்று உரத்துச் சொல்லி ஆசனங்கொடுத்து மரியாதை செய்வார்.

மகாத்மா காந்தியடிகளின் பேரன்புக்கு உரியவர் பண்டித மதன் மோகன் மாளவியா அவர்கள் சிவபூசாதுரந்தரர். நாவலர் பெருமான் அவர்கள் எழுதிய 'கடவுள்' என்ற

— 04 ஆம் பக்கம் பார்க்க

சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையின்மை

# கொழும்பு செல்லமுடியாது கடும் நோயாளர்கள் அவதி

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறப்பதிவு செய்த பல கடும் நோயாளிகள் அங்கு செல்வதில் தாமதம் ஏற்பட்டுவருவதையடுத்து கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புற்று நோயால் பாதிக்கப் பட்டவர்களை மேலதிக சிகிச்சைக்காக மகரகம புற்று நோயாளர் வைத்திய சாலைக்கு கொண்டு செல் வதற்காக காங்கேசன் துறைக்கு உணவு கொண்டு வரும் கப்பலில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஆனால் இதில் சம்பந்தப் பட்ட பகுதியினா போதிய அக்கறையின்றிஇருப்பதினால் இந்த நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்வதில் தேவையற்ற தாம தம் ஏற்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

உரிய வைத்திய சிகிச் சையோ, வலி குறைப்பு மருந்தோ அற்றநிலையில் இந்த நோயாளர்கள் நாள் தோறும் பெரும்வேதனையை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும் வேலை எதிர்பார்த் தளவு துரிதமாக நடை பெறாததால்கப்பல்கொழும்பு திரும்பும் திகதியையும் சரி யாக அறிவிக்கவில்லை. இத னால்கொழும்புசெல்லும்கடும் நோயாளர்கள் பெரும் சிர மத்துக்குள்ளாகின்றனர். (74)

இந்திய இலங்கை ராணுவ நடவடிக்கைகளால்

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு 15 கோடி ரூபா சேதம்

இலங்கை,இந்தியஇராணுவ நடவடிக்கைகளின்காரணமாக யாழ் மாவட்டத்திலுள்ள 23 பல நோ.கூ சங்கங்களுக்கும்15 கோடி ரூபாவுக்கும் அதிக மான தொகை நஷ்டம் ஏற் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட் டுள்ளது.

கடந்த ஆறுமாத கால இலங்கை இராணுவ நட வடிக்கைகளால் மட்டும் இச் சங்கங்களுக்கு மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை மதிப்பிடக்கூடிய கட்டிடங்கள், வாகனங்கள் தளபாடங்கள் சேதமாக்கப் பட்டுள்ளன.

தீவுப்பகுதியில்இடம் பெற்ற இச்சம்பவங்களால் அப்பகுதி யைச் சேர்ந்த நான்கு பல நோ.கூ.சங்கங்கள் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை நஷ்டத்தை அடைந்துள்ளன.

நெருக்கடியான காலங்களில் சகல ஸ்தாபனங்களும் ஸ்தம் பிதமடைந்திருந்த போதெல் லாம் முனைப்புடன் செயல் பட்டுமக்களைப் பட்டினிச்சா விலிருந்து காப்பாற்றி வரும் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இந்த அமைப்பு தொடர்ந்தும்தளராது செயல் பட்டு வருவது இங்கு குறிப் பிடத்தக்கது. (66)

# கிளிநொச்சியில் சேவைக்கால ஆங்கிலப் பயிற்சி ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியருக்கான சேவைக்கால ஆங்கிலக் கல்விப்பயிற்சி கிளி நொச்சி கனிஷ்ட மகாவித்தி யாலயத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

மேற்படி ஆங்கில ஆசிரிய ருக்கான சேவைக்காலப் பயிற்சி இம்மாதம் 5-ம் திகதி தொடக்கம் 21-ம் திகதி வரை நடைபெற்று வருகின் றது.

இப்பயிற்சிக்கான ஒழுங்கு களை ஆங்கில வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி ஞா. குமாரசுவாமி மேற் கொண்டு வருகின்றார். (ப-6)

## வீரமரணம்

கடந்த மாதம் 25-ந் திகதி திருமலையில் உள்ள விடுத லைப்புலிகளின் முகாமில் ஏற் பட்ட எதிர்பாராத விபத்தில் லெப். ஜெயபாஸ் (கணபதி மாடாசாமி, பன்குளம்) வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## திருடன் அகப்பட்டான்

சாவகச்சேரிச் சந்தையினுள் இரவு வேளை பொருட்களை திருடிய ஒருவர் சந்தைக் காவலாளிகளால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார். (ப 32)

வவுனியாவில்—

யான பொம்மர்த் தாக்குதல் இடம் பெற்றது.

இதே வேளை கொழும்பு செல்லவெனச் சென்ற பல பிரயாணிகள் இடைநடுவில் திரும்பி விட்டதாகவும். சிலர் பாடசாலைகளில் தங்கியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகி றது. (70, 71)

இலங்கை...

மாமியும் மருமகளும் நேற்று முன்தினம் பலியானது தெரிந்ததே.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இதே குடும்பத்தைச் சேர்ந்த சி. வரதலட்சுமிஇவரின்5பிள்ளை களையும் பதுங்கு குழியில் இருந்து வெளியே இழுத்து சுட்டுக்கொன்றது குறிப்பிடத் தக்கது. (71)

வீடுபார்க்கச்...

சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தை தங்கராசா கிருஷ்ண பிள்ளை (36), வைரமுத்து சிவலிங்கம் (25) ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். (71)

நாவலர் - நம் ......

பாடத்தின் நுணுக்கங்களை மாளவியா அவர்களுக்கு மகா மகோபாத்தியாய ஈசான சிவாசாரியர் சம்ஸ்கிருத பாஷை யிலே விளக்கிக் கூறினார்கள். மாளவியா அவர்கள் இருகரங் கங்களையும் சிரசிற்குவித்தவண்ணம் யாழ்ப்பாணம் இருக்கும் திக்கை நோக்கி 'அந்த டீகானுக்கு வணக்கம்' என்று மிக்க உருக்கத்துடன் வணக்கஞ் செய்தார்.

இத்துணைப்பெருமைகளுக் கெல்லாம் பாத்திரரான நாவ லர் பெருமான் அவர்கள் ஐம்பத்தேழு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார்கள் சிறுவர் தொடங்கிப் பெரியோர்வரை எல் லோருக்கும் எப்பொழுதும் பயன்படத்தக்க வகையில் நூல் களை எழுதினார். பல நூல்களுக்கு உரைஎழுதினார். பல நூல்களைப் பரிசோதனைஞ் செய்து பதிப்பித்திருக்கின்றார்கள். பிரசங்கமழை பொழிந்தார்கள். சமீபத்தில் நம்மத்தியில் வாழ்ந்து மறைந்தவர்களான தங்கத்தாத்தா, நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் 'நல்லைவந்தருளு நாவலன் கண்டனப் பிரசங்கமாமெனக் கதிரைமாமலை அருவிகாலுமே' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். புராணபடன முறையை யாழ்ப்பாணத்தில் வளர்த்த பெருமை நாவலர் பெருமானுக்கே உண்டு. யாழ்ப்பாணக்கலாசாரம் கந்தபுராண கலாசார மாயிற்று.

தனிப்பட்டவர்களாயினுஞ்சரி, சங்கங்கள் சபைகளைச் சேர்ந்தவர்களாயினுஞ்சரி, அரச உத்தியோகத்தராயினுஞ்சரி அவர்கள் மீது பிழை கண்டபோது சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்த நாவலர் பெருமான் எடுத்த முயற்சிகள் அநேகம்.

நாவலர் பெருமான் அவர்களைப்பற்றி வசன நூல்கள் செய்யுள் நூல்கள் நாடகங்கள் வெளிவந்துள்ளன. நாவலர் பெருமானின் ஞாபகமாகச் சிலை நிறுவியுள்ளார்கள். நாவலர் விழாக்கள் நடக்கின்றன. எனினும் நாவலர் பெருமானின் உன்னத சேவையின் சிறப்பை இச்செயல்களுக்குள் அடக்கி விட முடியாது.

நாவலர் பெருமானின் கொள்கையினை நாம் மெய்யாய்க் கடைப்பிடித்து வாழ்வதே நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய அஞ்சலியாகும்.

நாவலர் நமக்கோர் காவலர்.

வன்செயல்களால் இறந்தவர்களுக்கு

# மரணச் செலவுகளுக்கு பணம் வழங்கப்படும்

அண்மைக்கால வன்செயல் களின் போது மரணமானவர் களுக்கு மரணச் செலவுகளுக் கான கொடுப்பனவுகளை பிரதி வெள்ளிக்கிழமையும் பணமாக வழங்க யாழ் செய லக புனர் வாழ்வு புனர மைப்புக் கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இம்மாதம் 4ஆம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் இதற்கான விண்ணப்பங்க ளைச் சமர்ப்பித்தவர்கள் அவற்றிற்குரிய கொடுப்பனவு களைப் பணமாக இம் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ் செயலக சிறாப்பரிடம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விண்ணப்பித்த வர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படம், மரணச் சான்றிதழ் (இனாமாக வழங்கப்பட்டது) மூலப்பிரதி ஆகியவற்றுடன் நேரில் சமுகமளித்து பணத் தைப் பெற்றுக் கொள்ள லாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (66)

# மன்னாருக்கு கப்பல் மூலம் தபால்கள் அனுப்பப்படுகின்றன

மன்னார் மாவட்டத்திற் குரிய வெளியூர்த் தபாற் பொதிகள் கொழும்பிலிருந்து படையினரால் கப்பல் மூலம் மன்னாருக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

உள்ளூர்த் தபாற் சேவை கள் வழமை போல் நடை பெற்றுவருவதாகவும்தெரிவிக் கப்படுகிறது.

இதேபோல் மன்னாரில் இருந்து வெளியூர்த் தபால் கள் கொழும்புக்கே அனுப் பப்படுகின்றன. (33

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி அரச மருத் துவ மனையில் பல நாட் களாகத் தொடர்ந்து முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர் அவதிப்படுகின்றனர்.

குழந்தைகளுக்கான தடுப்பு மருந்துகளும், ஏற்புத்தடுப்பு, பெனிசிலின் போன்ற ஊசி மருந்துகளும் தொடர்ந்து பல நாட்களாக இம் மருந்துவ மனையில் தட்டுப்பாடாக உள்ளன.

குளிர்சாதனப் பெட்டி மண் ணெண்ணை மூலம் இயங்க வைக்கப்பட்டும் அவசியமான மருந்துகள் இல்லை எனவும் கூறப்படுகிறது. (35)

## யாழ் இந்துவில் நாவலர் விழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூஜை-விழா நாளை சனிக்கிழமை காலை யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரியிறுப்பாளர்...

யாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வரியிறுப் பாளர்களிடமிருந்து சபைக் குப் பெருந்தொகையான பணம், மின்சாரவரி,சோலை வரி. வியாபார வர்த்தக வரி கள் போன்றவற்றில் நிலு வையாக உள்ளன. மாநகர சபையானது தனது சேவை களை வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய விதத்தில் பகுதி பகுதியாகவாவது நிலுவைப் பணத்தினைச் செலுத்தி உதவுவதோடு, இவ்விடயத் திற்கு. வரியிறுப்பாளர்கள் முக்கியத்துவம் கொடுத்துதவ வேண்டும் என்றும் அவர் கேட் டுள்ளார்.

நிலுவைப் பணங்களைச் செலுத்துவதற்கு வசதியாக முற்பகல் 9மணியில் இருந்து பிற்பகல் 3மணிவரை வரு மானக் கருமபீடங்கள் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலாலி ..

நெருக்கடி ஏற்பட்டதாலும், சில பாடநெறிகள் வெளி மாவட்டத்தில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டம் மேற்கொண்டதாலுமே பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைத் திருநெல்வே லிக்கு மாற்றவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 250 க்குக் கூடுதலான மாண வர்களை மேலதிகமாகத் தெரிவு செய்ய வேண்டும் எனக் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (70)

காணாமல் ..

களையும் தனித்தனியான படிவங்களில் நிரப்பி அந்தந்த உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் ஒப்படைக்கு மாறு யாழ் செயலகம் கேட் டுள்ளது. (66)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**மருத்துவ பீடம்**

3-ம் ஆண்டு மருத்துவ பீட பரீட்சையும், 2-ம் ஆண்டு மருத்துவ பீட பரீட்சையும்.

மேற்கூறப்பட்ட பரீட் சைகள் யாவும் பிற்போ டப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்னர் அறி விக்கப்படும்.

பதிவாளர்.

12064

## காலமானார்

**சின்னவன் சின்னத்தம்பி**

சொக்கதிடல், புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சின்னவன் சின்னத்தம்பி நேற்று 7.12.90 (வெள்ளிக்கிழமை) அகால மரணமானார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற தவசி, சின்னவன் அவர்களின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்ற இராமு மற்றும் நாகம்மா, வெள்ளையம்மா அவர்களின் சகோதரரும், சிதம்பரநாதன் (சுவிஸ்), திருமதி வேவி சிதம்பரநாதன் (சுவிஸ்), சச்சிதானந்தம் (சுவிஸ்), முருகதாஸ் (சுவிஸ்), தேவிகா, செல்வமணி, செல்வம். மதனவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், சுப்பிர மணியன் அவர்களின் மாமனும், லிங்கரூபன், சியாளினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 8.12.90 (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்- எஸ். சண்முகம்.

12063

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறறெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 08-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.